

திருப்பூர் மாநகராட்சி, வார்டு எண் 43, நடராஜ் திரையரங்கம் அருகில் உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் நொய்யல் ஆற்றின் குறுக்கே ரூ.14.00 கோடி மதிப்பீட்டில் அகலப்படுத்தப்பட்ட உயர்மட்டப் பாலத்தினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக துணைப் பொதுச் செயலாளர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே, மாநகராட்சி மேயர், வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ந.தினேஷ்குமார், மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித், துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம், திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் சிவபிரகாஷ், 2ம் மண்டலத் தலைவர் தம்பி ஆர்.கோவிந்தராஜ், 1ம் மண்டலத் தலைவர் வெ.உமா மகேஸ்வரி பகுதி கழக பொறுப்பாளர் பி.ஆர்.செந்தில்குமார், கல்விக் குழுத் தலைவர் பெ.திவாகரன், நாகராஜ், சாந்தா மணி, பொங்கலூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் ஜேசிபி எஸ்.பாலுச்சாமி, மாவட்ட முன்னாள் பொருளாளர் கே.ரத்தினசாமி உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்டம் கோட்டை பகுதி செங்குந்தர் திருமண மண்டபத்தில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்பு திட்ட முகாமினை வீட்டுவசதி மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி பார்வையிட்டு சொத்து வரி பெயர் மாற்றம் வேண்டி கோரிக்கை மனு அளித்த மனுதாரரின் மனுவின் மீது உடனடி தீர்வாக பெயர் மாற்றம் செய்யப்பட்டு உரிய ஆணையினை வழங்கினார். நிகழ்வில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், கோட்டை பகுதி கழக செயலாளர் பொ.ராமச்சந்திரன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### நிவேதா எம்.முருகன் தலைமை ! மயிலாடுதுறை மாவட்டத்தில்

# "என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச் சாவடி" முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## முதன்மை செயலாளர், அமைச்சர் கே.என்.நேரு - அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் சிறப்புரை!

மயிலாடுதுறை, நவ. 6 – மயிலாடுதுறை மாவட்டம் தி.மு.க சார்பில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்ற தலைப்பில் வாக்குச்சாவடி முகவர்கள் (பி.எல்.ஏ.2). பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் (பி.டி.ஏ) ஆலோசனை மற்றும் பயிற்சி கூட்டம் மயிலாடுதுறையில் சின்னேசர் மஹாலில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்ட கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் தலைமை தாங்கினார். மயிலாடுதுறை மத்திய ஒன்றிய கழகச் செயலாளர் ஞான. இமையநாதன் வரவேற்றார்.

நகரக் கழகச் செயலாளர்கள் குண்டாமணி(எ) என்.செல்வராஜ், ம.சுப்பராயன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மூவலூர் எம். மூர்த்தி, என்.இளையபெருமாள், பி.எம்.முருகமணி மங்கை எம்.சங்கர், செல்லசேது.ரவிக்குமார், பி.எம் அன்பழகன், எம்.அப்துல்மாலிக், ஏ.ஆர்.ராஜா, கு.வைத்தியநாதன், அமிர்த.விஜயகுமார், ஏ.ஜி.ஜெ.பிரபாகர், பஞ்சு.குமார், மலர்விழிதிருமாவளவன், பேரூர் கழகச் செயலாளர்கள் எம்.சம்சுதீன்,

என்.அண்ணாதுரை, எஸ்.கே. முத்துராஜா, எம்.அன்புச்செழியன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.கோகுது ஆகியோர் முன்னிலை வகித்தனர் கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளரும், மண்டல பொறுப்பாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே. என்.நேரு, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். கூட்டத்தில் கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், சட்ட மன்ற தொகுதி பார்வையாளர்கள் கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் என் இளையராஜா, மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் மன்னை த சோழராஜன், தலைமைக் கழக வழக்கறிஞர் முதினேஷ்குமார், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர்கள் பி.கேசவன், பி.எம்.ஸ்ரீதர், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர். அருள்செல்வம், மாநில விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக.வீரப்பாண்டியன், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் வை.சௌமியன், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள் கி.சத்தியசீலன், எம்.எம்.சித்திக், ஏ.சி.என்.விஜயபாலன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் இராம.இளங்கோவன் முத்து. மகேந்திரன், ஜி.என்.ரவி, மாவட்ட கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன், துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ் செல்வமணி, கண்ணகிபன்னீர், பொருளாளர் மகா அலெக்சாண்டர், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் எஸ். சுவாமிநாதன், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், எஸ்.சங்கர்நாராயணன், நந்தம் ஏ.வின்சென்ட், ஜெ.கபிலன், அ.காந்தி, பி.கென்னடி, ஹரிசத், சுபாநெடுஞ்செழியன், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் எஸ்.பாலாஜி, இரா.முருகன் ஆர்.சாந்தி, தீபாசத்தியேந்திரன், இரா.செல்வராஜ், ஆர்.எஸ். ஸ்ரீதர், டி.ராஜ்குமார், இரா.தனராஜ் இரா. மனோகரன், பெரு.வீரமணி. இரா. முருகப்பா, காளி. தேசப்பன், எம்.எஸ்.முத்துகுபேரன், வெடி எஸ். பாலமுருகன், க.அறிவுச்செல்வன், வி.எஸ்.பிரபாகர், மா.வைத்தியநாதன், எஸ்.எம். சமசதின், அரசு வழக்கறிஞர்கள் இராம.சேயோன், எஸ்.கார்த்திகேயன், தணிகைப முனி, சி.அருள்தாஸ், எஸ்.குணசேகரன், முத்துக்குமார், ஜெயந்தி மாவட்ட ஊராட்சி குழு முன்னாள் தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், சீர்காழி நகர் மன்ற தலைவர் துர்கா பரமேஸ்வரிராஜசேகர், தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுணா சங்கரிகுமரவேல், பூங்கொடி அலெக்சாண்டர், சங்கீதாமரியப்பன, கண்மணி அறிவழகன் முன்னாள் ஒன்றியக் குழு தலைவர்கள் கே.மகேந்திரன் எஸ்சுரேஷ், தியாக விஜயோவான் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகள் வாக்குச்சாவடி முகவர்கள் (பி.எல்.ஏ.2). பூத் டிஜிட்டல் ஏஜென்ட் (பி.டி.ஏ.) கலந்து கொண்டனர் முடிவில் மாவட்டக் கழக துணைச் செயலாளர் எஸ் செல்வமணி நன்றி கூறினார்.

கூட்டத்தில்

கழக முதன்மைச் செயலாளரும், மண்டல பொறுப்பாளரும், நகராட்சிநிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் தளபதி சிறப்பான ஆட்சியால் வரும் சட்டமன்றத் தேர்தலைப் பொறுத்தவரை

மக்களும் நன்றாக இருக்கிறார்கள், கூட்டணியும் நன்றாக இருக்கிறது, நமது கழகத் தோழர்களின் செயல்பாடுகள் நன்றாக இருக்குமானால் மீண்டும் நமது கழகத் தலைவர் தளபதி தலைமையில் திமுக மீண்டும் ஆட்சி அமைக்க கழகத் தோழர்களின் பணி மிக முக்கியமான பணி இருக்கும். வாக்காளர் திருத்த பணியில் கழகத் தோழர்கள் சிறப்பாக நல்ல முறையில் செய்ய வேண்டும். இப்போது இங்கே கூடியிருக்கும் கூட்டத்தை பார்த்தால் ஏற்கனவே மயிலாடுதுறை மாவட்டத்தில் மூன்று தொகுதிகளையும் திமுக கூட்டணி கைப்பற்றியுள்ளது. இப்போதும் வரும் சட்ட மன்ற தேர்தலிலும் மூன்று தொகுதிகளையும் கைப்பற்றும் மாவட்டமாக மயிலாடுதுறை மாவட்டமாக இருக்கும் என்பது எள்ளளவு கூட சந்தேகமில்லை.. .மயிலாடுதுறை மாவட்ட கழகத்தினர் சிறப்பான செயல்வீரர்கள். ஒரே நாளில் நான்கு கலைஞர் சிலைகளை திறந்த ஒரே மாவட்டம் மயிலாடுதுறை மாவட்டம் தான். இந்த கலைஞர் சிலை திறப்புக்கு நான்கு ஒன்றிய செயலாளர்களின் பணி சிறப்பாக இருந்தது, நான் தலைவர் இடத்திலேயே சொன்னேன் மாவட்ட செயலாளர் நிவேதா முருகன் உதவி, நான்கு ஒன்றிய செயலாளர்கள் சிறப்பாக செயல்பாட்டார்கள் என்று தலைவர் இடத்திலே சொன்னபோது தலைவர் மகிழ்ச்சியாக இருந்தார். டெல்டா மாவட்டத்தில் 44 சட்டமன்றத் தொகுதி மற்றும் கரூர் 4சட்டமன்ற தொகுதி சேர்த்து 48 சட்டமன்ற தொகுதி நமது டெல்டாவில் உள்ளது.ஒரு ஆட்சி அமைய வேண்டும் என்றால் 118 சட்டமன்றத் தொகுதி வெற்றி பெற்றால் தான் ஆட்சி அமையும். அதில் மூன்றில் ஒரு பங்கு டெல்டா மாவட்டத்தில் இருக்கிறது. இதை சரியாக கையாண்டால் மீண்டும் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு, தலைவர் தளபதி ஆட்சிப் பொறுப்புக்கு வருவதை எந்த கொம்பனாலும் தடுக்க முடியாது. 2002 ஆண்டு வரைவு வாக்காளர் பட்டியல் படி 80 சதவீத வாக்கு ஏற்கனவே சரியாக இருக்கிறது. 80 சதவீதம் போக 20 சதவீதம் புதிய வாக்காளர்கள் . அந்த 20 சதவீதம் வாக்காளர்கள் நாம் விரும்புகிற வாக்காளர்களாக இருக்க வேண்டும். நமக்கு வாக்களிக்காத வாக்காளர்கள் தவறுதலாக சேர்க்கப்பட்டால், அதை சேர்க்க விடாமல் மறுப்பு தெரிவிக்க வேண்டியது நமது கடமை. இதை கழகத் தோழர்கள் உறுதியாக செய்ய வேண்டும். தேர்தல் ஆணையம் பீகாரின் நிறைய கண்டிஷன் போட்டார்கள் ஆனால் தமிழ்நாட்டில் எழுதிக் கொடுத்தால் போதும் என்று சொல்லி உள்ளார்கள். வெளி மாநில தொழிலாளர்கள் இரண்டு மாதம் வேலை செய்வார்கள், இரண்டு மாதம் வெளியே சென்று விடுவார்கள். மூன்று மாதத்திற்கு மேல் தொடர்ந்து பணியாற்றுகிறார் என்று சான்றிதழ் இருந்தால்தான் அவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்க முடியும். வெளி மாநில தொழிலாளர்களை வாக்காளர்களாக சேர்க்க வேண்டும் என்று சிலர் முயற்சிப்பார்கள் அப்போது நாம் விழிப்புணர்வாக இருந்து மறுப்பு தெரிவிக்க வேண்டியது நமது கடமை. வாக்காளர் பட்டியல் சரி செய்து வரும்போது அதில் நமது வாக்காளர்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளார்களான என கவனமாக பார்க்க வேண்டும். 2002 ல் வந்த வாக்காளர் பட்டியலை உங்களிடம் வழங்கப்படும். ஒரு வாக்காளருக்கு இரண்டு படிவங்கள் கொடுக்கப்படும் அதில் ஒரு படிவத்தில் கையப்பம் விட்டுக் கொடுக்க வேண்டும் மற்றொரு படிவத்தில் எழுதி வாக்காளரின் போட்டோ ஒட்டி கொடுக்க வேண்டும். இந்தப் படிவத்தில் ஏதும் தவறு நடைபெற்றால் வாக்காளர் பெயர் பட்டியல் இடம்பெறாது. ஜெயலலிதா ஆட்சியில் தேர்தல் கமிஷனராக மலைச்சாமி என்பவரை நியமித்தி ருந்தார்கள். மலைச்சாமி திமுக வாக்குகளை 200, 300 என்று நீக்கி விட்டார். இதனால் அந்த தேர்தலில் மிகப்பெரிய பாதிப்பு நமக்கு வந்தது. நமது வாக்கு நூறு வாக்குகளை சேர்ந்த மாதிரி நீக்கினாலும் நாம் அதற்கு அப்ஜெக்ஷன் தெரிவிக்க வேண்டும். தவறான வாக்குகள் நூறு சேர்த்தாலும் நாம் அதற்குஅப்ஜக்ஷன் தெரிவிக்க வேண்டும். வாக்காளர் பட்டியல் திருத்தத்தில் கழகத்தினராகிய நாம் கவனமாக செயல்பட வேண்டும். கழக பி.எல் ஏ. 2 ஒரு நாளைக்கு 50 ஓட்டுகளை சேர்த்தால் 20 நாளில் ஆயிரம் ஓட்டுகளை சேர்த்து விடலாம். ஏற்கனவே 1000 பேருக்கு ஒரு நோட்டும் 100 பேருக்கு ஒரு நோட்டும் பி எல் ஏ. விற்கும் பி.எல்.சி. க்கும் வழங்கப்பட்டுள்ளது. 100 ஓட்டிற்கு பி.எல்.சி.க்கு என்று ஒரு நோட்டு வழங்கப்பட்டுள்ளது அந்த நோட்டில் இறந்தவர்கள் யார், நிரந்தரமாக குடி பெயர்ந்தவர்கள், யாரெல்லாம் இல்லை என்பதை கணக்கு எடுத்து வைத்திருப்பார்கள் அதுதான் ஓட்டு சேர்ப்பதற்கு இலகுவான பணியாக இருக்கும் வரும் சட்டதேர்தலில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் தளபதி ஆட்சி அமைய கழகத்தினர் விழிப்புணர்வாக இருந்து செயல்பட்டு

வாக்காளர் திருத்த பணியில் கழகத் தோழர்கள் சிறப்பாக நல்ல முறையில் செய்ய வேண்டும் இவ்வாறு அமைச்சர் கே. என்.நேரு பேசினார்

### சிவசங்கர் அறக்கட்டளை சார்பில், குன்னம் தொகுதி செந்துறையில்

# "தேர்வை வெல்வோம்" வழிகாட்டி வினா - விடை தொகுப்பு கையேடு !

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்!

அரியலூர், நவ. 6 - அரியலூர் மாவட்டம் குன்னம் தொகுதி செந்துறை ஒன்றியத்தில் "சிவ சங்கர் அறக்கட்டளை சார்பில்" குன்னம் தொகுதிக் குட்பட்ட செந்துறை ஒன்றியம், செந்துறை அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி செந்துறை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி நல்லாம்பாளையம், உஞ்ஜினி, சிறுகடம்பூர், ஆனந்தவாடி, இரும்புலிகுறிச்சி, பரணம், பொன்பரப்பி, பெரியாகுறிச்சி,

குறிச்சிகுளம், முள்ளு க்குறிச்சி, தளவாய், சன்னாசி நல்லூர், அங்கனூர் உள்ளிட்ட அரசு மேல்நிலைப் பள்ளி, அரசு உயர்நிலைப் பள்ளியில் பயிலும், 10ம் வகுப்பு மாணவ மாணவியருக்கு, பொதுத்தேர்வுகளை எளிதாக எதிர்கொள்ள உதவும் "தேர்வை வெல்வோம்" வழிகாட்டி வினா-விடை தொகுப்பினை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்.

தேர்வுகளை நம்பிக்கையுடன் எதிர்கொண்டு, வெற்றிபெற அன்பார்ந்த மாணவச் செல்வங்களை வாழ்த்தி மேலும், அப்பள்ளியில் பயிலும் அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் குடிநீர் பாட்டில்களையும் வழங்கி மாணவ,மாணவியர்களிடம் உரையாற்றினார்.

அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசியதாவது:

கடந்த ஆண்டு பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் அரியலூர் மாவட்டம் முதலிடம் பிடித்தது

தற்பொழுது இது மிகப் பெரிய வரலாற்று நிகழ்வாக உள்ளது அரியலூர் மாவட்டம் மாநிலத்தில் முதன்மையாக வந்துள்ளது கடந்த காலங்களில் பின் தங்கி இருந்த இந்த மாவட்டம் கல்வியில் முன்னேறி இருப்பது மகிழ்ச்சியான செய்தியாகும் கடந்த ஆண்டு பத்தாம் வகுப்பு தேர்வில் மாநிலத்தின் முதலிடம் என்பதும் பிளஸ் 2 வில் முதலிடம் என்பது இந்த மாவட்டத்தின் வளர்ச்சியை காட்டுகிறது தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வழிகாட்டுதல் படி இந்த துறை மிக சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

முதன்மை கல்வி அலுவலர் மற்றும் மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகளின் ஆசிரியர்கள் முழு உழைப்பையும் வழங்கி வெற்றி வாய்ப்பை இந்த மாவட்டத்தில் கொடுத்துள்ளார்கள் மாணவ மாணவிகளும் மிகச் சிறப்பான முயற்சி செய்து கடந்த ஆண்டைப்போல இந்த ஆண்டும் மாணவ, மாணவியர்கள் நன்றாக படித்து வெற்றி வாகை சூடவேண்டும்

நமது மாவட்டத்தின் கல்வித்துறை சார்ந்த அத்தனை அதிகாரிகள் ஆசிரியர்களுக்கும் மாணவ செல்வங்களுக்கும் அரியலூர் மாவட்ட மக்கள் சார்பாக எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் கடந்த 2006-2011 ஆண்டில் ஆண்டிமடம் சட்டமன்ற உறுப்பினராக இருந்த போது "தேர்வை வெல்வோம்" என்ற புத்தகம், கையேடு வழங்கி சிறந்த ஆசிரியர்களை கொண்டு வழிகாட்டி பயிற்சி மாணவ, மாணவியர்களுக்கு கொடுத்தேன் தொடர்ந்து கல்விக்கு பணியாற்ற வேண்டும் என்ற குறிக்கோளோடு செயல்பட்டு வருகிறேன் அதன் பெயரிலேயே 10, 11, மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறவேண்டும் என்ற எண்ணத்தில் என்னால் முடிந்த அளவில் முக்கிய வினா விடைகள் அடங்கிய புத்தகத் தொகுப்பை வழங்கி சிறிய அளவிலான எனது பங்களிப்பை அளித்து வருகிறேன் அதேபோல் மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும் நேரடியாக சென்று மாணவ, மாணவிகளை சந்தித்து வாழ்த்துகளை தெரிவித்து உற்சாகப்படுத்தி வருகிறேன் நான் வழங்கிய கையேடு உங்களுக்கு உதவியாக இருந்திருக்கும் எனினும் ஆசிரியர்கள் பங்களிப்பு இதில் முக்கியமானது, மாணவ, மாணவியர்களும் மிகுந்த எச்சரிக்கையுடன் தாய், தந்தை, ஆசிரியர்களின் தியாகத்தை நினைத்து நன்றாக படித்து தேர்வில் வெற்றி பெற வேண்டும், தமிழ்நாடு முதலமைச்சர், தமிழ்நாடு துணை முதல்வர் சார்பிலும், எனது சார்பிலும் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன் என கூறினார்.

### தமிழக முதல்வர் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு வருகை தர உள்ளதைத் தொடர்ந்து

# விழா நடைபெறும் மைதானத்தில் நடைபெறும் பணிகள் ஆய்வு!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் - கே.கே.செல்லப்பாண்டியன் நேரில் மேற்கொண்டனர்!

புதுக்கோட்டை, நவ. 6 - புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், கீரனூர் மூகாம்பிகை பொறியியல் கல்லூரி மைதானத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பங்கேற்கும் அரசு விழா தொடர்பான பாதுகாப்பு மற்றும் முன்னேற்பாடு பணிகள் குறித்து பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மாவட்ட ஆட்சித் தலைவர் மு.அருணா தலைமையில் (04.11.2025) அன்று ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் அரசின் திட்டங்கள் சென்று சேரும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் வருகின்ற 10.11.2025 அன்று நடைபெறும் விழாவில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கியும்,

பல்வேறு புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், முடிவுற்ற திட்டப் பணிகளையும் தொடங்கி வைக்கவுள்ளார்கள்.

மேலும் பொதுமக்களின் தேவைகளான வீட்டு மனைப் பட்டா, முதியோர் ஓய்வூதியத் திட்டம் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் உள்ளிட்ட குறைகளை தீர்க்கும் வகையில் அவர்களுக்கு அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்க வருகை தரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பதுடன் அனைத்துத்துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்றி விழாவினை சிறப்பான முறையில் நடத்திடும் வகையில் பணிகள் நடைபெற்று வருகிறது.

அதன்படி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பங்கேற்கும் அரசு விழா நடைபெறும் குளத்தூர் வட்டம், கீரனூர் மூகாம்பிகை பொறியியல் கல்லூரி மைதானத்தில் விழா தொடர்பான பாதுகாப்பு மற்றும் முன்னேற்பாடு பணிகள் குறித்து பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் , மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இந்த ஆய்வில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா, இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் ப.கோகுல்சிங், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் நாகவேல், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் ,

குளத்தூர் வட்டாட்சியர் அ.சோனைக் கருப்பையா, விராலிமலை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வள்ளியம்மை, ரவிச்சந்திரன், முன்னாள் ஊராட்சிமன்ற தலைவர் எம்.பரமசிவம் மற்றும் வே.ராஜேஸ், க.மதியழகன், தென்னலூர் எம்.பழனியப்பன், மு.பி.ம. சத்தியசீலன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



தருமபுரி மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் அவர்களின் ஆலோசனைப்படி பையர்நத்தம் கலைஞர் திருமண மண்டபத்தில் நடைபெற்ற பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய செயற்குழு உறுப்பினர்களின் ஆலோசனைக் கூட்டத்தில் தி.மு.க. ஒன்றிய செயலாளர் பி.எஸ். சரவணன் கலந்து கொண்டு "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" பயிற்சிக் கூட்டத்தில் வழங்கிய ஆலோசனைகளை குறித்தும்,(SIR) திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்தும் ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் சந்திரன், தாமோதரன், வழக்கறிஞர் சக்திவேல், செல்வராஜ், ஹாரீஸ், ஜாகிதாசெரிப், செல்வன் மற்றும் BLA2, BDA, Blc, கிளைக் கழக செயலாளர்கள் உள்ளிட்ட தி.மு.க.வினர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக அலுவலகம், முத்தமிழறிஞர் கலைஞர் வளாகத்தில், மக்களின் வாக்குரிமையை பறிக்க துணியும் (SIR) செயல்பாடு குறித்து,15 வேலம்பாளையம் பகுதி கழகத்திற்குட்பட்ட பாக முகவர்கள், பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் மற்றும் கழக நிர்வாகிகளுக்கான விரிவான காணொலி மற்றும் விளக்க உரை கூட்டத்தில் மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் ஆலோசனைகளை வழங்கினார். இதில் பகுதி கழக செயலாளர் கொ.ராமதாஸ், மாநகர துணை செயலாளர் அ.ராமசாமி, பொருளாளர் அ.சரவணகுமார், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் அருண், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பெரியார் குடியிருப்பு எம்.எஸ்.மணி, மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் ரத்தினசாமி உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.